பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
4.00

சுடர்: 6 பிரமோதூத ஞூ மாசி மீ 12 உ ஞாயிற்றுக்கிழமை (24-02-1991) UTHAYAN - A Lively Tamil National Daily கதிர்: 89

வளைகுடாவில் தரை யுத்தம் எந்நேரமும் வெடிக்கும் நிலை!

முச்சந்தி முரளி

பாத்துத்தான் அமைச்சர் பதவி கொடுத்திருக்கினம் போலை......!

"வீரப்பெண்"!

கொழும்பு, பெப். 24

நாடாளுமன்றத்தில் நடந்த வெள்ளியன்று இடம்பெற்ற கைகலப்பு, ரகளையில் பெண் அமைச்சர் ஒருவரும் முனைப்புடன் ஈடுபட்டார்.

சபாநாயகர் ஆசனத்துக்கு அருகே கையில் செருப்புடன் இவர் ஆவேசத்துடன் காணப்பட்டாராம். [உ]

அமெரிக்கக் காலக்கெடு காலாவதியானது

லண்டன், பெப்ரவரி 24

குவைத்தை விட்டு ஈராக் படைகள் விலகுவதற்கு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் விதித்த காலக்கெடுவை சதாம் ஹுசேன் தட்டிக் கழித்து விட்டார்.

காலக்கெடு பயனற்று காலாவதியானதால் வளைகுடாவில் பெரும் தரையுத்தம் எந்நேரமும் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்க காலக்கெடுவை ஈராக் தட்டிக் கழித்தது கவலைக்குரியது என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்தார்.

காலக்கெடு காலாவதியானதை அடுத்து, திட்டமிட்டபடி தரை யுத்தம் ஆரம்பமாகும் என்று பன்னாட்டுப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

பன்னாட்டுப் படைகளின் தரைத்தாக்குதல் புதிய தந்திரோபாயங்களையும் ஆச்சரியப்படத்தக்க பேரழிவுகளை ஏற்படுத்துவதாகவும் இருக்கும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

சோவியத் ரஷ்யாவின் பிந்திய சமரச யோசனையை ஈராக் ஏற்றதும் அமெரிக்கா நிராகரித்ததும் தெரிந்ததே.

இந்த சமரச யோசனை தொடர்பாக பேச்சு நடத்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

ஹெலி பரவலாக தாக்கு

யாழ்ப்பாணம், பெப். 24

குடாநாட்டின் பல இடங்களிலும் நேற்று ஹெலிகள் பரவலாக தாக்குதல்களை நடத்தின.

அனேக இடங்களில் பிரசுரங்களை வீசிய கையோடு, வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

யாழ். கோட்டை, கச்சேரியடி, அரியாலை, பாஷையூர், குருநகர், தபால்கட்டைச் சந்தி ஆகிய பகுதிகளுக்கு மேலாகப் பறந்தபடி ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

வலி. வடக்குப் பகுதியிலும் ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றன. அங்கும் பல இடங்களில் பிரசுரங்கள் வீசப்பட்டன.

சுன்னாகம், மல்லாகம் பகுதிகளில் வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. [ஒ-5-15-68-51]

கட்டுவனில் கடும் சண்டை

யாழ்ப்பாணம், பெப். 24

கட்டுவன் மினி முகாமிலிருந்து நேற்று முன்தினம் மாலை 6. 30 மணியளவில் ஷெல் தாக்குதல்களை நடத்திக்கொண்டு வெளியேற முற்பட்ட படையினரை, விடுதலைப் புலிகள் தடுத்து நிறுத்தி தாக்கினர்.

சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேல் பலத்த

[5 ஆம் பக்கம் பார்க்க]

சென்னையில் நேற்று மட்டும் 62 ஈழப் போராளிகள் கைது!

சென்னை, பெப். 24

சென்னையில் நேற்று மட்டும் 62 ஈழப் போராளிகள் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

போராளிகளின் மறைவிடம் ஒன்றிலிருந்து வயர்லெஸ் கருவிகள், வாக்கி டோக்கிகள், பாக்ஸ் இயந்திரங்கள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் அதே வட்டாரங்கள் கூறின.

பிளாஸ்டிக் விரைவு படகு ஒன்றும் எரிபொருள் பரல்களும் கைப்பற்றப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஈழப் போராளிகளைக் கண்காணிக்கத் தமிழ்நாட்டுக் கரையோரப் பகுதிகளில் 33 கண்காணிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டிருப்பதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. தேவாரம் கூறினார். [அ]

கிளிநொச்சி திருநகரில் நேற்றுக் குண்டு வீச்சு!

தாய், 3 பிள்ளைகள் காயம்

யாழ்ப்பாணம், பெப். 24

கிளிநொச்சி, பாற்பண்ணை — உதவி அரச அதிபர் காரியாலயம் [பழைய டி. ஆர். ஓ. கந்தோர்] அமைந்துள்ள பகுதியில்—திருநகரில் நேற்று முற்பகல் 10 மணியளவிலும் 11· 30 மணியளவிலும் பொம்மர்கள் குண்டுகளை வீசித் தாக்கின.

குண்டு வீச்சில் 4 வீடுகள் பெரும் சேதமடைந்தன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயமடைந்தனர்.

புஷ்பராஜா யோகேஸ்வரி [26 வயது] அவரது பிள்ளைகளான நேமிநாதன் [5வயது], தர்ஷிகா [2 வயது]. செல்வி [6 வயது] யோகேஸ்வரியின்

[6 ஆம் பக்கம் பார்க்க]

பஸ் மீது ஹெலித் தாக்கு; பயணி பலி! 8 பேர் காயம்!!

நுணாவில் சந்தியில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் இருந்து கேரதீவு நோக்கிப் புறப்பட்ட பயணிகள் பஸ் மீது நேற்று மாலை 5-30 மணியளவில் நுணாவில் சந்தியில் வைத்து ஹெலி கண்மூடித்தனமாக தாக்குதலை நடத்தியது.

நூற்றுக்குமேற்பட்ட பயணிகள் சென்ற பஸ் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ஒரு பயணி உயிரிழந்தார். 8 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் மூவர் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டனர். ஏனையோர் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டோர் வருமாறு:

[6 ஆம் பக்கம் பார்க்க]

மாங்குளத்திலும் இருவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாண, பெப். 24

மாங்குளம், கொல்லர் புளியங்குளம் பகுதியிலும் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பொம்மர் குண்டுவீச்சு இடம்பெற்றது.

மாங்குளம் பழைய இராணுவ முகாம் பகுதியை வட்டமிட்ட பொம்மர் வவுனியா பக்கமாகச் சென்று - சுமார் 2 மைல் தூரத்தில் திடீரென குண்டு வீச்சை நடத்தியது.

வீட்டின் முற்றத்தில் விழுந்த குண்டினால் ஆரோக்கிய நாதன் [64 வயது] அவரது மருமகளான சில்லாலையைச் சேர்ந்த ஆசிந்தா [45 வயது] ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குண்டுவீச்சில் வீடு பலத்த சேதமடைந்தது. [ஒ-5]

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

சாயிபாபாவின் அழகிய வர்ண ஸ்ரிக்கேர்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 266/1, ஸ்ரான்லி வீதியில் உள்ள ஸ்ரீ சாயிறாம் புத்தகசாலையில் தொடர்பு கொள்ளவும். [விக்னா ரியூஷன் சென்ரர் அருகாமை]. [15783]

கண்ணாடிமேசைகள், கட்டில்கள், மெத்தைகள், சிங்கர் தையல் மெஷின், சாப்பாட்டு மேசை, லாச்சியுடன் கவுண்டர்மேசை, கதிரை, வீட்டுக் கதவுகள், பனைமரங்கள், கிலாகைகள், சீற்முகட்டு ஓடுகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். [15899]

ஆனந்தா கலண்டர் 1991 ஆங்கில, தமிழ் திகதிகளும் சகல விரதநாட்களும், அட்டமி, நவமி, அரசாங்க விடுமுறைகள், விசேட தினங்கள் யாவும் அடங்கியது. ரூபா 22/- எங்கும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [15957]

தேவை

சம்பளத்துடன் றபர்ஸீல் வேலை பயில விரும்பும் பெண்கள் தேவை. ஆங்கில அறிவுடன் மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் 01-03-91 முன்னர் நேரில் வரவும். ''வீமா'' 104, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திச் சந்தி. [15966]

யாழ். சைவ மணமகனுக்கு 27 வயது நிரம்பிய T. A ஆக வேலை செய்யும் சைவ மணமகள் தேவை. தொடர்பு:- ABCDE விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [15969]

மணமகன் தேவை

யாழ். இந்து பெற்றோர் அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் 30 வயதுப் பெண்ணுக்கு மணமகன் தேடுகிறார்கள். எக்கவுண்டன், பட்டதாரி வங்கி உத்தியோகஸ்தர் போன்றோரும் விரும்பத்தக்கது. சீதனம் கொடுக்கப்படும். சகல விவரங்களுடன் தொடர்பு கொள்க: 182 C/O உதயன். [15898]

''அறிவுக்கு ஆங்கிலம்''

எல்லா நிலைகளிலும் உள்ள மாணவர்கட்கும் தனிப்பட்ட பிரத்தியேகமான போதனை, வீடுகளுக்கும் சென்று போதிக்கப்படும். தொடர்பு: T. N. S. சர்மா, 29, ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். [15897]

கல்வி

G.C.E.[O/L]இல் கட்டாய பாடமாகிய கணிதபாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 மணித்தியாலத்திலிருந்து, 40 மணித்தியாலத்திற்குள் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். மற்றும் A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநர்தன் No:- 10 லோகேந்திரா வீதி, கச்சேரி கிழக்கு, ஒழுங்கை சுண்டிக்குளி. [15894]

பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி [1991-03-02] ஆரம்பமாகும். கா. பொ. த[சா/த] சித்தி முக்கியம். நேரில் வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். முகவரி: பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா உயர் கலைக்கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் [15896]

இடமாற்றம்

இல: 455, காங்கேசன்துறை வீதி, சிவன் கோவிலடியில் இயங்கி வந்த நாயன் மார்க்கட்டு வைத்திய நிலையம், 179, நாவலர்வீதி, [நாவலர் பாடசாலைக்கு சமீபமாக] இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. டாக்டர் ஸ்ரீ ஜெயதேவி பஞ்சலிங்கத்தினால் முறிவு, நெரிவு வைத்தியம் உட்பட சகல நோய்களுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும. [15895]

புத்தகங்கள்

பல்தெரிவு வினாக்கள் மூலம் பொது இரசாயனமும், பௌதீக இரசாயனமும் ஆக்கம்: திருமதி இராஜேஸ்வரி மகேஸ்வரன் B. Sc [இரசாயன பேராசிரியர் யாழ். பல்கலைக்கழகம்] ம. செல்வரத்தினம் B. Sc விலை ரூபா 75/- A/L உயர்தர மாணவர்களின் இரசாயனப் பகுதியின் முழு பகுதிகளும் அடங்கியது. வெளியீடு: விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-5784]

நீர் நிலையியல்

க. பொ. த உயர்தர மாணவர்களுக்கு வரப்பிரசாதம் இந்நூல் கடந்தகாலப் பரீட்சை வினாக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. [ஆக்கியோன் P. வேலாயுதபிள்ளை B.Sc, S. பிரேம்நாத் B.Sc.] போட்டோஸ்ரற் பிரதிகளும் உடன் செய்யலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர்; மக்மிலன் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். [15886]

கொள்வனவு விற்பனை

பாவித்த மரத்தளபாடங்கள், செற்றிகள், அலுமாரிகள், கண்ணாடி மேசைகள், ஸ்ரீல் உருக்குத் தளபாடங்கள், மின்சார உபகரணங்கள், தையல் மெஷின், ஏனைய அனைத்துப்பொருள்களும் எம்மால் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: டில்கா ரேடேஸ், இல: 234, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். முட்டாஸ்கடை சந்தியில் இருந்து 50 யார் தூரத்தில் உள்ளது. [15961]

சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம், 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [15879]

மணமகள் தேவை

யாழ். இந்து 27 வயதுநிரம்பிய செவ்வாய் குற்றமுள்ள டாக்டர் உயரம் 6'' மணமானுக்கு, டாக்டர் மணமகள் தேவை. நட்சத்திரம் பூசம். 28 வயது நிரம்பிய B.Sc ஆசிரியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் விரும்பத்தக்கது. கிரகபாவம் மிகக் குறைவு. நட்சத்திரம் ரேவதி. தொடர்பு: ABCDE விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [15969]

நோவு வைத்தியம்

ஓட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணை எஸ்ரி மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [15876]

பிரத்தியேக வகுப்புக்கள்

ஆரம்ப வகுப்பு முதல் ஆண்டு 11 வரை கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் பிரபல கல்லூரி ஆசிரியரினால் வீடுகளுக்குச் சென்று கற்பிக்கப்படும். தொடர்பு: விளம்பர இல. 178, C/o உதயன். [சி/5797]

குருகுலம் ஆண்டு விழா

கிளிநொச்சி குருகுலம் ஆண்டுவிழாவும், கொடித்தினமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00மணிக்கு நடைபெறுகின்றன.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக பேராசிரியர் கா. சிவத்தம்பி கலந்து கொள்கின்றார். [இ-76]

உரும்பராய்ப் பகுதியில் ஷெல்

யாழ்ப்பாணம், பெப். 24

வெள்ளிக்கிழமை இரவு 8 மணி அளவில் பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஆட்டிலறி ஷெல்களில் ஒன்று உரும்பராய் வடக்கில் ஒரு வீட்டின் கேற்றடியிலும் ஊரெழு கிழக்கில் வாழைத்தோட்டம் ஒன்றிலும் விழுந்து வெடித்தன.

வாழைகள் சேதமடைந்தன. கேற் பாதிப்புக்குள்ளாகியது. [இ-154]

மரண அறிவித்தல்கள்

ஆறுமுகம் பொன்னம்பலம்

ஆறுமுகம் பொன்னம்பலம் காலமானார். இவர் தெய்வானையின் அன்புக் கணவரும் சண்முகலிங்கம், இராசரத்தினம், பரமேஸ்வரி, புவனேஸ்வரி, நகுலேஸ்வரி, முத்துக்குமாரசாமி, காலம்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் அன்புத் தந்தையும்; உருத்திரராஜா, தம்பிராஜா, உதயகுமார், சரோஜினிதேவி, திலகவதி, திவாகினி ஆகியோரின் மாமனாரும்; தனேஷன், வித்யா, விநோதன், பிறேமாவதி, சுவித்தா, சுமித்திரா, நாகேந்திரா, பிரியா, கஜேந்திரா, துஷ்யந்தி, பிரியந்தி, தமயந்தி, தனுஷ்யா. மயூரன், செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து ஈமக்கிரியைகளுக்காக இன்று 24-02-91 காலை 10.00 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

பொன்னம்பலம் குடும்பத்தினர்

ஆடியபாதம் றோட்
நல்லூர். யாழ்ப்பாணம். [15666[

சுப்பிரமணியம் வேலாயுதம்

[சிங்கராஜா]

நெடுந்தீவைச் சேர்ந்த சு. வேலாயுதம் காலமானார். இவர் காலஞ்சென்ற அக்னேஸின் அன்புக்கணவரும் ஆறுமுகத்தின் அன்புச் சகோதரரும் மாணிக்கராசா, வேல்ஆனந்தன் [விரிவுரையாளர் கோப்பாய்], அற்புதமலர் [ஆசிரியை சென் ஜோசப் வித்தியால்யம்], மன்திரேசா [பொன்றோஸ்] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சரஸ்வதி, திரேசம்மா, பேரம்பலம் [இறைவரி உத்தியோகத்தர்] தர்மலிங்கம் [இ. போ. ச.] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். ஈமக்கிரியைகள் இலந்தைக்குளம் வீதி இல. 10 ஆம் இல்லத்தில் திங்கட்கிழமை [25-02 91] மாலை நடைபெறும்.

தகவல்:

[15667] **இரா. பேரம்பலம்.**

பொன்னையா இரத்தினசிங்கம்

மாரீசன்கூடலைச் சேர்ந்த பொன்னையா இரத்தினசிங்கம் அவர்கள் 16-2-91இல் காலமாகி விட்டார். அன்னார் பராசக்தியின் அன்புக் கணவரும், அழகராசா [ப. நோ. கூ. ச., பண்டத்தரிப்பு], இன்பவதி [கச்சேரி, மல்லைத்தீவு], இந்துமதி [உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், பருத்தியிருப்பு], மதிவதனி [றோமன் கத்தோலிக்க பாடசாலை, மாரீசன்கூடல்], ஸ்ரீமத் நடராசன், குகதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திராணி, நாகேஸ்வரி, நாகராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், நடராசா [ஆசிரியர்], செல்லமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 24-2-91 நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக மாரீசன்கூடல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : இ. அழகராசா

மாரீசன்கூடல்,
இளவாலை. [15668]

அடிக்கடி நிகழும் குண்டு வீச்சால்

அறுவடை, மாணவர் வரவு பாதிப்பு

கிளிநொச்சி - உருத்திரபுரத்தில் பதற்றமான நிலை

கிளிநொச்சி, பெப். 24

கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் அடிக்கடி இடம்பெற்றுவரும் விமானக் குண்டுவீச்சுக்களால் அந்தப் பகுதி எங்கும் பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றது.

பாடசாலைகளுக்கு மாணவர் வருகை தருவது குறைந்துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் காலபோக நெல் அறுவடையும் இதனால் பாதிப்படைந்துள்ளது.

இந்த மாதத்தில் மட்டும் உருத்திரபுரம் பகுதியிலே நான்கு தடவைகள் விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

4 ஆம், 5 ஆம் திகதிகளில் இடம்பெற்ற குண்டு வீச்சுக்களில் 11 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்பதும் 19 ஆம், 22 ஆம் திகதிகளில் இடம்பெற்ற குண்டு வீச்சுக்களில் மாணவர்கள் உட்பட 6 பேர் படுகாயம் அடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

[இ-76]

பதுங்கு குழிகள்

கொடிகாமம், பெப். 24

கொடிகாமம் வர்த்தகர் சங்கத் தலைவரின் பணிப்பின் பிரகாரம், கொடிகாமம் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையப் பகுதிகளில் பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர்.

[இ-75]

கட்டடங்கள் அழிந்தாலும்

மனோபலம் அழியவில்லை

வல்வைப் புயல்

பகுதி: ஏழு

வல்லை

ந. அனந்தராஜ்

[முந்திய தொடர்ச்சி]

அப்படியே திரும்பி எதிரே உள்ள புட்டணிப் பிள்ளையார் கோயிலை நோக்கி நடந்தேன்.

சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள், அந்தக் கோயிலையும் விட்டு வைக்கவில்லை. அந்த ஆலயத்தின் கூரைகள், ஓடுகள் எல்லாமே சிதறி, ஆலயத்தின் சுவர்களில் பல இடங்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டும், உடைந்தும் இருந்தன.

புட்டணிப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து தெற்கே, 25 மீற்றர் தூரத்தில் உள்ள பழம்பெருமை வாய்ந்த முருகன் ஆலயம் குண்டுவீச்சினால் முற்றாகவே அழிந்து உருக்குலைந்து போய் இருந்தது.

அதன் எதிரே கம்பீரமாக எழுந்து நிற்கும் மாவீரர் தூபி ...... மக்களுக்காக சயனைற் அருந்தி மரணித்த குமரப்பா, புலேந்திரன் ஆகிய பன்னிருவரின் தியாகங்களை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தது. அதனைச் சுற்றி மட்டும் ஆறு எரிகுண்டுகள் போடப்பட்டிருந்தன.

நான்கு நாட்களிலும் கோடிக்கணக்கான ரூபா பணத்தைச் செலவழித்து, வெறும் கட்டடங்களையும், சொத்துக்களையுமே அரச படைகளால் அழிக்க முடிந்தது ... ஆனால் எமது மக்களின் மனோபலத்தை அழிக்க முடிந்ததா?

அங்கிருந்து, தெற்கு வீதியால் வரும்பொழுது, அந்த வீதியில் வசிக்கும் மீனாட்சி சுந்தரம் என்பவரைக் கண்டேன். இவர் வவுனியா அரசினர் வைத்தியசாலையில் பணிபுரிபவர்.

''கோயிலுக்குள்ளும், கோயிலைச் சுற்றிவரவும் 30 குண்டுகள் வரை போட்டிருப்பார்கள். ஒரு எரிகுண்டு என்னுடைய வீட்டில் விழுந்து இப்பவும் வெடிக்காது இருக்கிறது...''

மீனாட்சிசுந்தரம், கோயில் வீதியையும், தனது சேதமடைந்த வீட்டையும், வீட்டின் பின்புறம் விழுந்து வெடிக்காதுஇருக்கும் ப்பாஸ் எரிகுண்டையும் காட்டினார்.

மாடி வீடு மண் குவியலானது

இரண்டாம் நாளான திங்கட்கிழமை, ஒரு எரிகுண்டு விழுந்து வெடித்ததில்தான் காங்கேசன்துறை வீதியில் உள்ள, மு. கந்தசாமித்துரை என்பவரின் வீடு முற்றாகவே தீப்பற்றி எரிந்தது. அந்த வீட்டிற்குள் போகும் பொழுதே ஒருவித நாற்றம் மூக்கைத் துளைத்து வயிற்றைக் குமட்டியது. அவருடைய வீட்டில் ஒரு பொருள் கூட ... தளபாடங்கள் ... பாத்திரங்கள் ... புத்தகங்கள் ஒன்றுமே எஞ்சியிருக்கவில்லை ... எல்லாமே சாம்பராக இருந்தன. எரி குண்டுகளின் நாச சக்தியை நினைத்துப் பார்த்து ஆச்சரியப்பட்டேன்!

அந்த வீட்டில் இருந்து கிழக்கே 50 மீட்டர் தூரத்தில் ஓர் அழகான மாடிவீடு இருந்தது. அந்த இடத்தில் நின்று சுற்று முற்றும் பார்த்த எனக்கு வியப்பாக இருந்தது!

அந்த வீதியின் இரு பக்கங்களிலும் இடிந்த வீடுகளின் கற் குவியல்கள் பாதையை மூடி மறைத்தன. அந்த அழகான மாடிவீடு இருந்த இடத்தில் பாரிய ஒரு குழியும், கற்குவியல்களும் மட்டுமே எஞ்சியிருந்தன.

அந்தக் குவியலில் நான்கு பேர் நின்று, பாரிய உடைந்த கற்களை அகற்றி அதன் இடிபாடுகளுக்கிடையில் இருந்து ஆடைகள், பாத்திரங்கள் போன்றவற்றை இழுத்தெடுத்துக்கொண்டிருந்தார்கள். அங்கே நின்ற வீட்டின் சொந்தக்காரரான செல்லையா ஸ்ரீகரன் என்பவர் என்னை நோக்கி வந்தார்.

''குண்டு போடே[illegible] கள் எங்கை நின்ற[illegible]''

நான் அவரைக் கேட்டதும், அவர் கேட்காதது போல் இடது காதில் கையை வைத்தபடி, மிகநெருக்கமாக எனக்கு அருகில் வந்தார்.

நான் சிறிது உரத்து மீண்டும் கேட்டதும், ஸ்ரீகரன் புன்முறுவலுடன்,

'அண்டைக்குக் குண்டு வெடித்ததில் இருந்து காதில இருந்து இரத்தம் வடியுது ... அதோடை காதும் அவ்வளவாய்க் கேட்காதாம்...20 ஆம் திகதி பின்னேரம் 3-30 மணியளவில், பொம்மர்கள் சுற்றிச் சுற்றிப் பறந்து அங்கும் இங்குமாகக் குண்டுகள் போடத் தொடங்கியதும் மனைவியையும், குழந்தையையும் பதுங்கு குழிக்குள் அனுப்பினேன் ...... எங்கடை குழிக்குள், பதினொரு பேர்வரை இருந்தோம். முன் வீட்டில் உள்ள ஞானவேல் அண்ணன் பங்கருக்குள் இடமில்லாததால், எங்களுடைய மாடிப் பகுதி பாதுகாப்பானதால் அதன்கீழ் நின்றார்.

அப்பொழுது வை-12 சகடை விமானம் வட்டமிட்டபடி பறந்தது. அதில் இருந்து போட்ட குண்டு, விழும் பொழுது விசில் சத்தம் கேட்டதும், நான் பதுங்கு குழிக்குள் ஓடினேன் ... உட்படியில், கால் வைக்கவும் அந்தக்குண்டு என் வீட்டின்மேல் விழுந்து வெடிக்கவும் சரியாக இருந்தது. என்னுடைய மாடிவீடு படபட வென்று சரிந்து விழுந்து எங்களின் பங்கர் வாசலையும் மூடிவிட்டது.

ஒரே மூச்சில் சொல்லி விட்டு, ஏற இறங்க பார்த்தார். அவரது நிகில் அனுபவம் என்னைப் புல்லரிக்க வைத்தது. இதைவிட அந்த மாடிக் கட்டடத்தின் கீழ் நின்ற ஞானவேலின் நிலைமை [illegible] அவலமாக இருந்தது:

[வளரும்]

இலவச பாட நூல்கள் நாளை முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல் விநியோகம் நாளை திங்கட்கிழமை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வைத்து கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நூல் விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார்.

கப்பலில் வந்துள்ள இரண்டாம் தொகுதி பாட நூல்கள் நேற்று இறக்கப்பட்டு, யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு எடுத்து வரப்பட்டன. [உ-3]

வல்வையில் பாதிக்கப்பட்ட மாணவருக்கு நிவாரணம்

வடமராட்சி, பெப். 24

சமீபத்திய தொடர் குண்டு வீச்சின் போது வல்வெட்டித்துறையில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இலவச சீருடைகள், அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட உள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் பேராசிரியர் கா. சிவத்தம்பி இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார். [இ]

சோவியத்-அமெரிக்கா மீண்டும் முரண்பாடு

வளைகுடா யுத்தத்தை அடுத்து அமெரிக்காவுக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையே மீண்டும் கருத்து வேறுபாடு ஏற்படும் நிலை தோன்றியிருப்பதாக உலக அவதானிகள் கருதுகின்றனர்.

சோவியத் சமாதானத் திட்டத்தை அமெரிக்கா நிராகரித்திருப்பதைத் தொடர்ந்து இப்புதிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாம்.

ஜனாதிபதி கோர்பச்சேவ் நேற்று ஜனாதிபதி புஷ்ஷுடன் 90 நிமிடங்கள் வரை தொலைபேசி மூலம் உரையாடினார்.

இரண்டு ஜனாதிபதிகளும் இப்படி தொலைபேசி மூலம் உரையாடியது இதுவே முதல்தடவை ஆகும் என்று கூறப்படுகிறது.

எண்ணெய் வயல்கள் தீப்பிடித்து எரிகின்றன

குவைத்தில் குறைந்தது 150 எண்ணெய் வயல்கள் தீப்பற்றி எரிகின்றன என்று அமெரிக்கத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

குவைத்தில் 950 எண்ணெய் வயல்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

எண்ணெய் வயல்கள், அவற்றோடு தொடர்புடைய சுத்திகரிப்பு ஆலைகள், குழாய் அமைப்புகள் ஆகியவற்றுக்கு ஈராக் படைகள் தீவைத்து வருவதாக அமெரிக்கச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தரைத் தாக்குதல் உடன் ஆரம்பமா?

காலக் கெடுவுக்கு முன்னர் படைகளை விலக்கிக் கொள்ள ஈராக் முன் வராவிட்டால், குவைத்தில் உள்ள ஈராக்கிய படைகள் மீது தரைத் தாக்குதல் உடனே ஆரம்பமாகுமா? என்ற கேள்வி எழுந்து உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் அதற்கான திகதியை நிர்ணயிக்கவில்லை என்று பென்டகன் அதிகாரி ஜெனரல் தோமஸ் கெல்லி சொன்னார்.

வெட்கக்கேடானது என்கிறது ஈராக்

குவைத்தில் இருந்து ஈராக் படைகள் வெளியேற அமெரிக்கா விடுத்த காலக்கெடு அறிவிப்பு ''அவசரமானது, சிறுபிள்ளைத்தனமானது, வெட்கக் கேடானது'' என்று பக்தாத் அரசு கண்டனம் செய்துள்ளது.

வளைகுடாப் போரை மேலும் தீவிரமாக்குவதாக அமெரிக்காவின் காலக்கெடு அமைகின்றது என்றும் ஈராக் அரசு கூறியது.

அத்துடன் சோவியத் ஜனாதிபதியின் திருத்தப்பட்ட புதிய ஆறு அம்சத்திட்டத்தைத் தாம் ஏற்பதாகவும் ஈராக் அரசு நேற்று அறிவித்தது.

விவசாய நண்பர்களே!
தங்கள் தேவையே எங்கள் சேவை!

தாமான சகல விவசாய இரசாயனப் பொருள்களுக்கும், உரம், தெளிகருவி, விவசாய உபகரணங்கள் உதிரிப்பாகங்கள், மற்றும் கால்நடை மருந்து வகைகளுக்கும், விவசாயம், கால்நடை சம்பந்தமான ஆலோசனைக்கும், சேவைக்கும்,

துர்க்காஸ் விவசாய சேவை

மத்திய மகா வித்தியாலய வீதி,
[இலங்கை வங்கி அருகாமை],
நெல்லியடி.

THURGAS
VIVASAYA SEVAI
Nelliadi.

[15960]

அஞ்சலி

அமரர் ஆர். ஜே. மான்
(R. J. MANN)

[உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,
முன்னைநாள் அதிபர்]

ஓர் சகாப்தம் முடிவுற்றது
மான் [Mann] எனும்
உன்னத சகாப்தம் முடிவுற்றது.

உடுவில் பதிதனில் உதித்து
உடுப்பிட்டிக்காய் தன்னை ஈந்த
ஓர் உன்னத சகாப்தம் முடிவுற்றது.

ஆசிரியராய், அதிபராய் வழிகாட்டியாய்......
உடுப்பிட்டி மகளிர் கல்லூரியை உருவாக்கிய
ஓர் உன்னத சகாப்தம் முடிவுற்றது.

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்
வடமராட்சியில் புதுமைகள் செய்த
[Mann] மான என்னும் சகாப்தம்
கர்த்தருடன் கலந்தது.

எமக்கெல்லாம் தோன்றாத் துணையாய்
இருந்து வழிகாட்ட இறைஞ்சும்:
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி;
அதிபர், ஆசிரியர், ஊழியர், மாணவியர்.

[15958]

ஒஸ்லோ
கச்சேரி
நல்லூர் வீதி.

பொருளியல்
அருந்தவபாலன்

அளவையியல்
யுகபாலசிங்கம்

91 - தேசியவருமானம்
91 - குறியீட்டளவியல்
92 - குறியீடு

ஆரம்பம்: மாசி - 24

இந்து நாகரிகம்
காரைசுந்தரம்பிள்ளை

கணக்கியல்
இந்திரமோகன்

வர்த்தகம்
பசில்

[சி-5799]

திருகோணமலையில்

சிங்கள மீனவரை குடியேற்ற வீடுகள்

திருகோணமலை மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த சிங்கள மீனவர்களை மீண்டும் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரச தேவைகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட கரையோரப் பிரதேசக் காணிகளில் அவர்களை குடியேற்றத் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் பி. சிறிசேனா கூரே தெரிவித்தார்.

ஒதுக்கப்பட்ட இடங்களில் சம்பந்தப்பட்ட மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும், மீன்பிடித்துறை அமைச்சுடன் இணைந்து அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சின் நடமாடும் செயலகம் கடந்த சனிக்கிழமை சென். ஜோசப் கல்லூரியில் இயங்கியது. அங்கு வைத்தே அமைச்சர் இத்தகவல்களை வெளியிட்டார். [அ]

அந்த வர்த்தகர்கள் இருவரும் எங்கே?

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் வழியில் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் கூட்டிச்செல்லப்பட்ட இரண்டு வர்த்தகர்களுக்கு என்ன நடந்தது?

கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வவுனியாவில் இராணுவக் காவல் அரணில் படையினர் இந்த இரண்டு வர்த்தகர்களையும் தடுத்துப் பின்னர் கூட்டிச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

அவர்களுடன் இங்கிருந்து கூடச் சென்ற உறவினர் ஒருவர் தாம் இதனை நேரில் கண்டதாகச் சொன்னார்.

புளியங்கூடலைச் சேர்ந்த குடும்பஸ்தர்களான அவர்கள் இருவரையும் பற்றி அவரது உறவினர்கள் வவுனியா இராணுவ அதிகாரிகளிடம் விசாரித்தனர்.

சம்பந்தப்பட்டவர்களின் பெயரில் எவரும் இராணுவ முகாமுக்குக் கைது செய்யப்பட்டோ அல்லது கூட்டியோ கொண்டு வரப்படவில்லை என்று அதிகாரிகள் கையை விரித்துவிட்டனர்.

உறவினர்களால் தேடப்படும் இரண்டு வர்த்தகர்களும் வியாபாரத்தின் பொருட்டு ரொக்கப் பணமும், வங்கி டிராப்டும் எடுத்துச்சென்றனர் என்று மேலும் அறிய வந்தது. [அ-113]

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
19
|
04
|
1917

மறைவு:
24
|
01
|
1991

அமரர் வல்லிபுரம் வைரமுத்து
[நெல்லியடி பிரபல மெக்கானிக் - முத்து]

அன்னாரின் இல்லத்தில் அந்தியேட்டிக் கிரியைகளும், சபிண்டீகரணமும் 24-02-1991 நடைபெறவுள்ளது. இவ் வைபவத்திற்கு உற்றார், உறவினர் நண்பர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
திருமதி வ. செல்லம்மா,
மனைவி.

''மந்தோலை'',
[illegible]

[15869]

முதுகலைமாணி பரீட்சையில் மூவர் சித்தி

யாழ்ப்பாணம், பெப். 24

முதுகலைமாணி பரீட்சையில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து மூவர் சித்தி அடைந்துள்ளனர்.

திரு. கே. தேவராஜா [பொருளாதாரம்], திருமதி. ராஜரத்தினம் [கல்வி], திரு. எஸ். பாக்கியராஜா [புவியியல்] ஆகியோரே இம் மூவரும் ஆவர். [இ]

ஹெலி வேட்டு

சாவகச்சேரி, பெப். 24

கடந்த புதன்கிழமை நண்பகல் மட்டுவில் வடக்கில் ஹெலி ஒன்று வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது. சில வீட்டுக்கூரை ஓடுகள் உடைந்தன. [இ-31]

அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சை

முதலாம் மற்றும் இரண்டாம் தர பாடசாலை அதிபர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இம் மாதம் 26 ஆம் திகதி முதல் கொழும்பில் நடைபெற இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அனுபவம் மற்றும் தகைமை ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும் என்றும் அச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டன. [இ-எ]

நினைவஞ்சலி

அமரர்
ஆரணி ஜெயதாசன்

தோற்றம்:
18 - 07 - 1977

மறைவு:
24 - 02 - 1987

சொர்க்கத்தில்
இடம்பிடித்து
சோகமெல்லாம்
தீர்த்துவிட்டு
சொந்த வீட்டில்
வாழ விடு - தங்கா
சுதந்திரமாய்
உலாவவிடு!

உன்னை நினைந்துருகும்
அன்புப் பெற்றோர்,
உற்றார், உறவினர்.

''புது வீடு''
கருகம்பனை,
K. K. S.

[151956]

உதயன்

நம்பிக்கை ஊற்று

எல்லாப் பொருள்களுமே விலை உயர்ந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் சரிந்துள்ளன. இப்பிரதேசத்தில் பரம்பரை பரம்பரையாகப் பயிரிடப்படும் கத்தரி, வெண்டி, தக்காளி ஆகிய மரக்கறிகள் மட்டுமன்றி, மலைநாட்டுக்குமட்டுமேஉரித்தானவை என்று கருதப்பட்ட கரட், பீற்றூட், கோவா, கோவாப்பூ, சலாத் போன்ற மரக்கறிகளும் இம்முறை இங்கு நிறைய விளைச்சல் கண்டுள்ளன. அவற்றின் ருசியும், தரமும், போஷாக்கு மதிப்பும் முந்திய ஆண்டுகளைவிட மிகவும் விசேடமாக இருக்கின்றன.

எரிபொருள், செயற்கை உரம் ஆகிய நவீன வசதிகள் இல்லாதிருந்த போதிலும், பழைய முறைப்படி பயிர் செய்து இம்முறை மரக்கறி விளைச்சல் குறிப்பிடத்தக்க அளவுஉயர்ந்திருக்கிறது. அது எப்படி?

மக்கள்மனம்விரும்பிஉழைத்தார்கள். தோட்டக்காரன் மட்டும்தான் மரக்கறி உற்பத்தியில் ஈடுபடுவது என்ற நிலை மாறி, எல்லோருமே மண்ணைப் பண்படுத்தினார்கள். விதைகள் நட்டார்கள். தண்ணீர் பாய்ச்சினார்கள். இயற்கை உரங்களை இட்டார்கள். மண் தாய் மனம் மலர்ந்து மடி நிறையப் பூத்துக் காய்த்து நல்ல அறுவடை தந்திருக்கிறாள்!

தோட்டக்காணிகளில்மட்டுமன்றி வீட்டு நிலங்களிலும் மரக்கறிகள் பயிரிடப்பட்டன. கட்டாந்தரையாகக் கிடந்த வெற்றுக் காணிகளிலும் மரக்கறிகள் வளர்க்கப்பட்டன. அதன்விளைவே அதிகவிளைச்சல்.

மலைநாட்டு ''பட்டர்'' பழத்தையே இங்கு உற்பத்தி செய்ய இயலும் என்றால், எமக்குத் தேவையான உணவு வகைகளை ஏன பயிரிட்டுப் பெற முடியாது? மகியங்கனைச் சோளம் இங்கு மதாளித்து வளர்கிறது என்றால், எமது உணவுத் தேவையை மாற்றுப் பயிர்கள் மூலம் ஈடுசெய்ய முடியாது என்று எண்ணலாகுமோ? அது எவ்வளவு தப்பு?

இம்முறை மரக்கறி உற்பத்தியில் கண்ட வெற்றி முக்கிய உணவுப் பொருள்களுக்கும் அவற்றுக்கான மாற்றுப் பயிர்ச் செய்கைக்கும் விசாலிக்க வேண்டும். மனமும், முயற்சியும், உழைப்பும் இருந்தால் எமது உணவுத் தேவையை நாம் பூர்த்தி செய்யமுடியும். நமது காலில் நிற்கமுடியும். மரக்கறி உற்பத்தி அதிகரிப்பு அதற்கான நம்பிக்கை ஊற்று எனலாம்.

நோயாளிகளுடன் கப்பல் புதன்கிழமை புறப்படுகிறது

யாழ்ப்பாணம், பெப். 24

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலையினால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளிகளை ஏற்றிச் செல்லும் கப்பல் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை புறப்படவுள்ளது.

கப்பலில் செல்லவுள்ள நோயாளிகளும், உதவியாளர்களும் 2 நாட்களுக்குப் போதுமான உணவு, குடிதண்ணீர் மற்றும் மருந்து பாவிப்பவர்களானால் ஒரு கிழமைக்குப் போதுமான மருந்து வகைகள் ஆகியவற்றுடன் அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு சமுகம் கொடுக்க வேண்டும் எனப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு செல்வதற்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட நோயாளிகள் மேற்குறித்த ஆயத்தங்களுடன் வைத்தியசாலைக்கு வரும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-15]

தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 24

வங்காலையில் கடமைக்குச் சென்ற அதிபர், ஆசிரியர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்ட சம்பவம் குறித்தும், கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்கள் குண்டுவீச்சால் காயம் அடைந்த சம்பவம் குறித்தும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி, கல்வி அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்கு தான் கொண்டு வந்திருப்பதாக சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார். [இ]

வடக்கில் போரிடுவோர் மதுவைத் தொடாதவர்கள்!

நாடாளுமன்றில் எம்.பி.

வடக்கில் அரசுடன் சண்டையிட்டுக் கொண்டிருப்பவர்கள் மதுவை வெறுப்பவர்கள். அதனைத் தொடாதவர்கள், இது தமிழர்களுக்குப் பெருமை தருவதாகும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் யாழ்ப்பாண மாவட்ட எம்.பி திரு. கே. நவரத்தினம்.

வடபகுதி மக்கள் தங்களுக்கு மதுபானம் அனுப்புமாறு அரசை ஒருபோதும் கேட்டதில்லை. கேட்கும் நிலையிலும் அவர்களில்லை.

வடபகுதியில் இப்போது சாப்பாடு இல்லை. மது எதற்கு? மண்ணெண்ணெய் அனுப்புங்கள் என்றும் அவர் கேட்டார். [அ]

வவுனியாவுக்கு சலுகை!

யாழ்ப்பாணம், பெப்.24

வவுனியாவரை மண்ணெண்ணெய் தாராளமாகக் கொண்டு வர அரசு அனுமதி வழங்கி இருக்கிறது. அப்படி ஒரு சலுகை அங்கு!

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அநுராதபுரப் பிராந்தியக் குதத்திலிருந்து வேண்டிய அளவு மண்ணெண்ணெய் எடுத்து வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திரு. கி. த. மார்க்கண்டு தெரிவித்தார்.

அநுராதபுரத்திலிருந்து பவுசர்கள் மூலமும், தனியார் லொறிகள் மூலமும் மண்ணெண்ணெய்கொண்டு வரும்போது வழித்துணைக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு பொலீஸார் இணங்கியுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

மண்ணெண்ணெய் கொண்டு வரும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகர்கள் லீற்றர் 10 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யக்கூடாது எனக் கேட்கப்பட்டுள்ளனர். [அ]

அவசர மருந்து வகைகள் இன்னும் வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம். பெப். 24

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அவசர தேவையாக கடந்த இரு மாதங்கள் கோரப்பட்ட மருந்து வகைகள் வந்து சேரவில்லை.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த வருடத்துக்கு தேவையான மருந்து வகைகள் இன்னும் அனு[illegible] வில்லை கடந்த இரு [illegible]களுக்கு தேவையான மருந்து வகைகள் சம்பந்தமாக என்னால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளில் பெரும்பாலானவை கூட்டுப்படைத் தலைமையகத்தால் அனுமதிக்கப்படவில்லை.

இது குறித்து சுகாதாரப் பணிப்பாளருக்கு விளக்கிய போதும், கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை [illegible] [இ-3]

போரை நிறுத்துவது குறித்து ராஜீவ் - கோர்பச்சேவ் பேச்சு

மாஸ்கோ, பெப்.24

வளைகுடாப் போரை நிறுத்துவது தொடர்பான பேச்சுக்களை நடத்த முன்னாள் பிரதமரும் இந்திரா காங்கிரஸ் தலைவருமான ராஜீவ் காந்தி மாஸ்கோவில் ஜனாதிபதி கோர்பச்சேவுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ராஜீவ் காந்தியுடன் முன்னாள் வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங், முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி, திரு. மணி சங்கர் ஐயர் ஆகியோரும் மாஸ்கோ சென்றுள்ளனர்.

கோர்பச்சேவுடன், ராஜீவ் காந்தி 4 மணி நேரம் பேச்சுக்கள் நடத்தினார். இன்று ராஜீவ் தலைமையிலான குழு ஈரான் தலைநகர் தெஹ்ரான் செல்லும்.

ஈரான் ஜனாதிபதி ரஸ்வன் ஜானியின் அழைப்பை ஏற்று ராஜீவ் காந்தி செல்கிறார் என்றும்-

அதன் பின்னர் ராஜீவ் காந்தி ஈராக் மற்றும் வளைகுடா நாடுகளுக்குப் பயணம் செய்வார் என்றும் அறிவிக்கப்படுகிறது

இதே வேளை - சந்திரசேகர் அரசின் வெளியுறவு துணை அமைச்சர் திக்விஜய்சிங் தலைமையில் அரசுத் தூதுக் குழு ஒன்று தெஹ்ரான் சென்றுள்ளது.

வளைகுடா நிலைமை பற்றி அணிசேரா இயக்கப் பிரதிநிதிகள் எடுக்கும் முயற்சிகளில் இக்குழு பங்கு கொள்ளும். [ஓ-எ]

சிறுதானிய உற்பத்திக்கு ரூ 1,000 கடன் உதவி

அராலி, பெப். 24

தொல்புரம் பிரதேச உற்பத்திக் குழுவுக்கு உட்பட்ட பகுதியில் சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்குமுகமாக ஏக்கர் ஒன்றுக்கு 1,000 ரூபா கடன் உதவியை ஐக்கிய இராஜ்ய சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்க முன்வந்துள்ளது.

இந்த உதவி பயிர்ச்செய்கைக்கு தேவையான விதை தானியங்களாகவும், மிகுதி பணமாகவும் வழங்கப்படும்.

கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலமாக வழங்கப்படும் இந்த உதவிப்பணம் பயிர்ச்செய்கை முடிவில் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் பயறு, கௌபீ, எள்ளு, குரக்கன், சாமை, தினை போன்ற சிறுதானியப் பயிர்ச்செய்கைக்கு ஊக்குவிப்பு அளிக்கப்படும். [இ-12]

பல்கலைக்கழக சபைக்கு 8 புதிய அங்கத்தவர்கள்

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். பல்கலைக்கழக ஆலோசனைச் சபைக்கு 8 பேர் கொண்ட புதிய அங்கத்தவர் குழு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளது

இக்குழுவின் விசேட கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

அன்றைய தினம் காலை இணைக்களத் தலைவர்கள் நியமனமும், அதைத் தொடர்ந்து அன்றைய தினம் மாலை புதிய பீடாதிபதிகள் தெரிவும் நடைபெறும்.

புதிய ஆலோசனைச் சபையின் முதலாவது கூட்டம் மார்ச் மாதம் 16 ஆம் திகதி நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரன் இத்தகவல்களைத் தெரிவித்தார். [இ-6]

கட்டுவனில்.. .

[1 ஆம்பக்கத் தொடர்ச்சி]

சண்டை நடந்தது.

விடுதலைப் புலிகள் பஸிலன்—2000 தாக்குதலையும் நடத்தினர்.

இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்து தெரிய வரவில்லை.

அதேசமயம் வீமன்காமம் பகுதியிலும் மோதல் இடம்பெற்றது.

இப்பகுதிகளில் இருந்து பின்வாங்கிய இராணுவத்தினர் குடியிருப்பு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

கட்டுவன், ஏழாலை, குப்பிளான், குரும்பசிட்டி, தெல்லிப்பழை பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. [இ-68]

யாழ்ப்பாணம்

விலைப் பட்டியல் வைக்க வர்த்தகர்களுக்கு வற்புறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். மாநகர எல்லைக்கு உட்பட்ட சகல வர்த்தகர்களும் தமது வியாபார நிலையங்களில் விலைப் பட்டியலை பாவனையாளர்களின் பார்வைக்கு வைத்திருக்க வேண்டும்.

பட்டியலில் விற்பனைக்கு உள்ள சகல பொருள்களினதும் விலைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

வர்த்தகர் சங்கம் நேற்று இவ்வாறு அறிவித்து உள்ளது.

விலைப் பட்டியல்களை வைக்காதோர் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களாயின் அதற்கு சங்கம் எதுவித பொறுப்பும் ஏற்காது என்றும் வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது. [ஒ]

நாடாளுமன்றத்துக்குள்ளும் அவசரகாலச் சட்டம்!

கொழும்பு, பெப். 24

அவசரகாலச் சட்டம் நாடாளுமன்றத்திற்குள்ளேயும் அமுல் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன் கண்டவாறு கூறினாராம்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் அமைச்சர் அத்துலத்முதலி பேசினார்.

அப்போது அவர், ''அவசரகாலச் சட்டம் நாடாளுமன்றத்திற்கு வெளியேதான் அமுல் செய்ய வேண்டிய நிலை மாறியுள்ளது, கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவம், நாடாளுமன்றத்துக்குள்ளேயும் அவசரகாலச் சட்டத்தை அமுல் நடத்தவேண்டியேற்பட்டுள்ளதை புலப்படுத்துகின்றது''— என்று சொன்னார். [ஒ-எ]

தாய்லாந்தில் திடீர்ப் புரட்சி! ஆட்சி ராணுவத்தின் கையில்!!

பாங்கொக், பெப். 24

தாய்லாந்தில் இராணுவ ஆட்சி ஏற்பட்டுள்ளது.

பிரதமர் சூனவான் தலைமையிலான சிவிலியன் அரசு பதவி கவிழ்க்கப்பட்டதாகவும் — இராணுவ ஆட்சி ஏற்பட்டுள்ளதாகவும் தாய்லாந்து இராணுவ உயர்பீடம் நேற்று அறிவித்தது.

முப்படைகளின் தளபதிகள் அங்கம் வகிக்கும் தேசிய அமைதி காக்கும் கொமாண்ட் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளதாக கொமாண்ட் தலைவராகத் தன்னைப் பிரகடனப்படுத்திக்கொண்ட ஜெனரல் சுன்கொங் கம்சங்பொன் இராணுவம் நடத்தும் தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் அறிவித்தார்.

அதேசமயம் நாட்டின் வடபகுதிக்குச் செல்வதற்காக பாங்கொக் விமான நிலையத்தில் காத்திருந்த பிரதமரை இராணுவம் தடுப்புக் காவலில் வைத்திருப்பதாக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [ஒ-எ]

படையினரின் "பத்திரிகை"

யாழ்ப்பாணம், பெப். 24

அரசாங்கப் படைகளும் இப்போது தமிழ் மக்களுக்காகப் ''பத்திரிகை'' வெளியிடத் தொடங்கியுள்ளன.

கடந்த எட்டு மாதங்களாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் விட்டு விட்டு கொழும்புப் பத்திரிகைகளை வீசி வந்த விமானப் படையினர்—

பின்னர் அரசுக்குச் சார்பான செய்திகளை ஒளிப் பிரதி [போட்டோஸ்டாட்] செய்து ஹெலி மூலம் போட்டு வந்தனர்.

முன்னர் அனேகமாக ஏரிக்கரைப் பத்திரிகைச் செய்திகளை மட்டுமே ஒளிப் பிரதி செய்து வானத்திலிருந்து போட்டவர்கள்—

இப்போது ஏனைய கொழும்புப் பத்திரிகைகளில் தமக்கு ஆதரவாகவும், பிரசாரமாகவும் அமையும் செய்திகளை வெட்டி ஒட்டி ஒளிப் பிரதி செய்து ''போக்கஸ்'' [Focus] என்ற பெயரில் இரண்டு பக்கக் ''குட்டிப் பத்திரிகை'' ஒன்றை தமிழ்ப் பகுதிகளில் வீசி வருகிறார்கள்.

அந்தப் பத்திரிகையின் 23 ஆம் இலக்கப்பிரதிகள் நேற்று யாழ்ப்பாண நகரத்தில் ஹெலியிலிருந்து வீசப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை பண்ணைக் கடலுக்கே விருந்தாகின. [அ]

பயிற்சி நெறி இன்று ஆரம்பம்

யாழ். கோட்டத்துக்கு உட்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிநெறி இன்று ஆரம்பமாகிறது.

இன்றும் நாளையும் யாழ். இந்துக் கல்லூரியில் முதலாவது பிரிவினருக்கும், மார்ச் 3ஆம், 4ஆம் திகதிகளில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இரண்டாவது பிரிவினருக்கும், மார்ச் 8ஆம், 9ஆம் திகதியில் யாழ். இந்துக் கல்லூரியில் மூன்றாவது பிரிவினருக்கும் பயிற்சிநெறி நடைபெறும். [இ]

கூட்டுறவு உத்தியோகத்தர் கருத்தரங்கு

கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான விசேஷ கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு யாழ்ப்பாணம் கூட்டுறவு அலுவலகத்தில் நடைபெறும்.

வளைகுடா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாஸ்கோ சென்றிருந்த ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸ் நேற்று அங்கிருந்து புறப்பட்டார்.

புறப்படுவதற்கு முன்னர் அவர் சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவைச் சந்தித்தார்.

அப்போது திரு. கோர்பச்சேவ், ''தற்போதைய யுத்தத்தின் கடைசிக் கட்டம் எதனைக் கொண்டு வரும் என்பது பற்றி ஈராக் சிந்திக்க வேண்டும். ஈராக்கின் நடவடிக்கைகளினால் ஏற்படப்போகும் விளைவுகள் அனைத்தையும் ஈராக் சீர்தூக்கி பார்க்கவேண்டும்''— என்று ஈராக் அமைச்சரிடம் எடுத்துக் கூறினார் என்று கிரெம்ளின் பேச்சாளர் சொன்னார்.

இதேசமயம் அமெரிக்காவின் காலக்கெடு நேரம் நேற்றிரவு முடிவடைந்து கொண்டிருக்கும்போது, பக்தாத் வானொலி— ''போருக்கு ஈராக் மக்களும் படையினரும் தயாராக இருப்பதாக'' கூறும் அறிக்கைகளை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

இதற்கிடையில்—

பன்னாட்டுப் படைகள் நேபாம் குண்டுகளை வீசி தமது விமானத் தாக்குதல்களை நேற்றுத் தீவிரப்படுத்தின என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

கிளிநொச்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாயாரான நாகலிங்கம் செல்லம்மா [44 வயது] ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

காயம் அடைந்தவர்களில் செல்வியைத் தவிர, ஏனைய நால்வரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குண்டு வீச்சினால் அப்பகுதியில் [illegible] சேதமடைந்தன. [உ-5-15]

ஈழ மண்ணுக்கு உழைத்த 10 பேருக்கு தேசிய விருது

யாழ்ப்பாணம், பெப். 24

தமிழ் ஈழ மண்ணுக்காக உழைத்த அறிஞர்கள் மற்றும் கலைஞர்கள் பத்துப் பேருக்கு தேசிய விருது வழங்கப்பட இருக்கிறது.

மார்ச் இறுதி வாரத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் முத்தமிழ் விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சியின் போது இந்த விருது வழங்கப்படும்.

ஈழத்தின் தேசிய விருது என்ற தரத்தில் கணிக்கப்படக்கூடிய இந்த விருது பெறுமதி மிக்கதாகவும், கௌரவத்திற்கு உரியதாகவும் இருக்கும்.

இவ்விருதுக்குரிய பெயர் இன்னமும் தெரிவு செய்யப்படவில்லை.

முத்தமிழ் விழா ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நேற்றுக் காலை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விருது குறித்து கோடிட்டுக் காட்டப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினால் நடத்தப்படும் முத்தமிழ் விழா குறித்து இக்கூட்டத்தில் விளக்கமளித்த கலை, கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை இந்த விருது குறித்தும் விளக்கமளித்தார்.

பத்து நாட்கள் நடைபெறவிருக்கும் இந்த விழாவில் இயல், இசை, நாடகத்துறை நிகழ்ச்சிகளுக்கு முறையே மும்மூன்று நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இறுதி நாள் நிகழ்ச்சியில் விருது வழங்கும் வைபவம் நடைபெறும்.

இத்தகவலை கவிஞர் புதுவை இரத்தினதுரை வெளியிட்டார்.

தமிழீழத்தில் நடைபெறும் மிகப்பெரிய விழாக்களில் ஒன்றாக — இங்கு நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டை விட— பிரமாண்டமான அளவில் முத்தமிழ் விழா நடைபெறும் என்றார் அவர்.

இந்த மண்ணுக்காய் உழைத்த — விருதுக்குத் தகுதியுடைய — பெரியோர்களின் பெயர்களை பொது மக்கள் கலை, கலாசாரப் பிரிவுக்கு அனுப்பி வைத்தால் அந்த விவரங்கள் விருதுக்குரியோரை தெரிவு செய்யும் குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றார் அவர்.

நேற்றைய கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரான திரு. தேவர், கலை, கலாசாரப் பிரிவின் பிரிவுப் பொறுப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், அறிஞர்கள். நிகழ்ச்சி அரங்கமைப்பாளர்கள் என பலதுறைப்பட்டவர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

சந்திரசேகரின் ஆட்சி தினக்கூலி அரசாம்!

புதுடில்லி, பெப். 24

இந்திரா காங்கிரஸின் ஆதரவில் செயற்படும் சந்திரசேகர் அரசு ஒரு 'தினக்கூலி அரசு' என்று 'சண்டே ரைம்ஸ்' என்ற இந்திய வார இதழ் வர்ணித்துள்ளது.

இதேவேளை— சந்திரசேகர் அரசின் ஆயுள் விரைவில் முடியப் போகிறது என்று முன்னாள் பிரதமர் வி. பி. சிங் கூறியிருக்கிறார்.

ராஜீவ் எப்போது ஆட்சியைப் பிடிப்பார்?

புதுடில்லி, பெப். 24

ஆட்சியைப் பிடிக்க நாடாளுமன்றத்தில் தமக்கு பெரும்பான்மை இருக்கிறது என்று எப்போது இந்திரா காங்கிரஸ் உணருகிறதோ, அப்போது திரு. ராஜீவ்காந்தி பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்வார்.

இப்படி காங்கிரஸின் முக்கிய தலைவர்களில் ஒருவரான திரு. வி. என். காட்கில் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

இக்கூற்று தேர்தலைச் சந்திக்காமலேயே ஆட்சி அமைக்க இந்திரா காங்கிரஸ் முயற்சிக்கின்றது என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்று புதுடில்லியில் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். [ஒ-எ]

பஸ் மீது...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எஸ். ரட்ணராணி [வயது 30] கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம், ரீ. ராஜேஸ்வரியம்மா [வயது 54] கொக்குவில், அன்ரனி நிக்கிலஸ் [வயது 36] யாழ்ப்பாணம்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது. அவரது பெயர் விபரம் தெரியவரவில்லை. [ஒ-5-15]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24 - 2 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.